014

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

## FIRST YEAR EXAMINATION IN ARTS (EXTERNAL) – 2011/2012
HELD IN APRIL/MAY, 2013

# HIC 1.11 The Sources of the Hindu Traditions

நேரம்: **03 மணித்தியாலயம்**

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

---

01. "இயற்கைச் சக்திகளைக் கடவுளராகக் கருதி வழிபடும் பலதெய்வ வழிபாட்டு நிலையிலிருந்து பரம்பொருள் ஒன்றே என்கின்ற ஏகத்துவக் கொள்கை வரையிலான சிந்தனைப் போக்கின் பரிணாம வளர்ச்சியினை வேத இலக்கியங்களிற் கண்டுகொள்ளலாம்" – ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. ஆகமங்கள், கோயிலை மையப்படுத்திய வழிபாட்டு முறைமைக்கான விதிகளையும் விளக்கங்களையும் தரும் ஆதார நூல்களாக அமையுமாற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

03. புராணங்களின் பொது இயல்புகளை விளக்குவதோடு சமய தத்துவங்கள், நெறிமுறைகள் என்பன பற்றிய அறிவினை மக்கள் மத்தியிற் கொண்டு செல்வதில் அவை அடைந்த வெற்றியையும் மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

04. "இதிகாசங்கள், பாரததேசத்தினதும் இந்துப் பண்பாட்டினதும் ஒருமைப்பாட்டுக்கு ஆதாரமாய் அமைவதோடு காலாதிகாலமாக மக்கள் மனங்களில் ஒழுக்க விழுமியங்களை விதைத்து, அவர்களை நெறிப்படுத்துவனவாயும் அமைகின்றன" - இக்கூற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

05. பாரம்பரியமாக, பாரததேசத்து அரசுகளின் அரசியல், பொருளாதார, நீதி, நிருவாக முறைமைகளுக்கான ஆதார நூல்களாக, தர்மசாஸ்திரங்கள் விளங்கியவாற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

06. பிரஸ்தானத் திரையங்களுள் ஒன்று என்ற வகையிலும் பிறவாற்றாலும், இந்துப் பண்பாட்டில், பகவத் கீதை பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

07. திருமுறைத் தொகுப்பின் அமைப்பினை விளக்குவதோடு திருமுறைகள் சமய உணர்ச்சிக்கும் நிலைக்களமாக அமைந்தவாற்றையும் தெளிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

08. பாசுரங்கள், பக்தி உணர்ச்சிக்கும் வைணவசமய எழுச்சிக்கும் உந்துதலாய் அமைந்தவாற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)